# Løven og de tre oksene

- En fortelling fra Somalia







முன்னொரு காலத்தில் சோமாலியாவில் ஒரு அழகான பெரியகாடு இருந்தது. அந்தக் காட்டின் நடுவிலே உயர்ந்த மரங்களின் மத்தியில் பச்சைப் பசேலென ஓரிடம் இருந்தது. அதன் அருகே ஓர் நதி சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. அங்கே மூன்று எருதுகள் வசித்து வந்தன. அவை வெள்ளை, கறுப்பு, மண்ணிறம் ஆகும். அவை மூன்றும் நெருங்கிய நண்பர்களாகவும்  சந்தோசமாகவும் வசித்து வந்தன.

Det var en gang en stor og fin skog i Somalia. Midt i skogen, mellom de høyreiste trærne, lå det en grønn, vid slette, med en elv som rant igjennom.  Der bodde det tre okser; en hvit okse, en svart okse og en brun okse. De var bestevenner og levde fint sammen.



ஒரு நாள் சிங்கமொன்று எருதுகளிடம் வந்தது. அதனால் மூன்று எருதுகளும் மிகவும் பயந்து விட்டன. ஆயினும் அவை ஒன்றாகச் சேர்ந்து சிங்கத்தை எதிர்க்கத் துணிந்தன. சிங்கம் பலசாலி என்றாலும் மூன்று எருதுகளும் இணைந்து நின்றதால் அவை சிங்கத்தை விடப் பலமாகி விட்டன.

En dag fikk de besøk av en løve. De tre oksene ble *så* redde at de samlet seg sammen og gjorde seg klar til å sloss med løven. For selv om løven var sterk, var de *sammen*, sterkere enn ham!



“அமைதியாக இருங்கள். நான் ஆபத்தானவன் இல்லை” என்றது சிங்கம். எருதுகளும் அமைதி அடைந்தன.
நான் அருகிலுள்ள காட்டில் தனிமையாக வசிக்கின்றேன். அதனால் நான் உங்களுடன் வசிக்க முடியுமா? நானும் உங்களின் நண்பராக இருப்பேன். நாங்கள் ஒருவரை ஒருவர் கவனித்தும் கொள்ளலாம், என்றது சிங்கம். எருதுகளும் இது நல்ல யோசனை என நினைத்தன. சிங்கத்தை நண்பனாக வைத்திருந்தால் தமக்கும் பாதுகாப்பாக இருக்கும் என எண்ணின

«slapp av, jeg er ikke farlig», sa løven og la seg ned på alle fire. «dere skjønner, jeg bor på den andre siden av skogen, og der er det så ensomt og øde. Kan vi ikke bo her sammen, være venner og passe på hverandre.» Oksene syntes det var en god idé å ha en løve som venn, en som kunne beskytte dem mot de farlige dyrene der ute.



ஒரு நாள் வெள்ளை எருது வெளியே புல் மேயச் சென்றது. சிங்கம் இளைப்பாறிக் கொண்டிருந்த மற்றைய எருதுகளின் காதருகே சென்று இரகசியமாக”உங்களிற்கு ஒரு விடயம் தெரியுமா? என்றது.  இந்த வெள்ளை எருது மிகவும் வெண்மையாக இருக்கிறது. இதனால் இரவு வேளைகளில் வெளிச்சமாக இருக்கிறது. பயங்கரமான மிருகங்கள் இங்கே வந்து உங்களைப் பிடித்துத் தின்னப்போகிறது, என்றது. இதனைக் கேட்டதும் மற்றைய எருதுகளிற்கு பயம் பிடித்துவிட்டது. நான் வெள்ளை எருதை இங்கே இருந்து விரட்டி விடுகிறேன். என்றது சிங்கம்.

En dag var den hvite oksen ute på beite, mens de to andre tok seg en ettermiddagslur. Da gikk løven bort til de to oksene og forsiktig hvisket i ørene deres: «Vet dere hva? Den hvite oksen er så lys at han skinner skarpt om kvelden. De farlige dyrene der ute vil lett legge merke til ham også komme hit og spise oss alle sammen, la oss jage den hvite oksen vekk».



இதனைக் கேட்டதும் எருதுகள் மிகவும் பயந்து விட்டன. சிங்கம் கூறியது உண்மை என நம்பிய எருதுகள் வெள்ளை எருதை விரட்டி விட்டன.

Da de to oksene hørte dette, ble e veldig redde. «Løven har rett» sa de og jaget vekk den hvite oksen».



தனியாக ஆற்றங்கரையில் நின்ற  வெள்ளை எருதை மிகவும் இலகுவாக பிடித்துத் தின்றது. சிங்கம்.

Det tok ikke lang tid før løven fant den hvite oksen alene ved elvebredden og spiste han opp.



சில நாட்களின் பின் மண்ணிற எருதின் காதருகே சென்று இரகசியமாகக் சிங்கம் கூறியது. “இந்த கறுப்பு எருது மிகவும் கருமையாக இருக்கிறது. இதனால் பகல் வேளைகளில் நன்றாகத் தெரிகிறது.  பயங்கரமான மிருகங்கள்  இங்கே வந்து உங்களைப் பிடித்துத் தின்னப் போகிறது,என்றது. நாம் இதனை இங்கிருந்து விரட்டி விடுவோம் என்றது சிங்கம்.

Etter en stund gikk løven bort til den brune oksen og hvisket i øret hans: ‹‹Du vet du hva, den svarte oksen er så mørk at han synes så godt i dagslyset. Alle de farlige dyrene der ute kommer til å legge merke til ham. Også kommer de hit og spiser oss opp alle sammen. La oss jage han bort››.



இதனைக் கேட்டதும் மண்ணிற எருதுக்கு மிகவும் பயமாக இருந்தது. மண்ணிற எருதும் சிங்கத்துடன்  சேர்ந்து கறுப்பு எருதை விரட்டி விட்டது

Da den brune oksen hørte dette, ble han kjempe redd. «La oss jage ham bort sa løven». Dette gikk den brune oksen med på.



தனிமையில் நின்ற கறுப்பு எருதினை இலகுவாக பிடித்துத் தின்றது சிங்கம். பின்பு  எதுவுமே நடக்காதது போல்  திரும்பி மண்ணிற எருதிடம் வந்தது.

Det tok ikke lang tid før løven fant den sorte oksen alene, fanget ham og spiste ham. Også dro han tilbake og latet som ingenting.



இப்போது மண்ணிற எருது மட்டுமே தனியாக நின்றது.
சிங்கம் அதனையும் பிடித்து தின்ன ஆயத்தமானது.

Nå var den brune oksen alene igjen med løven.
Og det var hans tur bli spist opp.



சிங்கம் பாய்ந்து மண்ணிற எருதைப் பிடித்தது. எருது தன்னால் முடிந்த வரை சிங்கத்தை எதிர்த்தது. தனது நண்பர்கள் இல்லாமல் தனியாக சிங்கத்துடன் சண்டை பிடிக்க முடியவில்லை என உணர்ந்தது. சிங்கம் தனது கூர்மையான நகங்களாலும் பற்களாலும் எருதினைப் பிடித்துக் கொண்டது.

Løven jaget og fanget den brune oksen, og oksen sloss tilbake alt han kunne. Men uten sine venner var han ikke sterk nok til å kunne sloss med løven. Løven tok frem de skarpe klørne og tennene og bet oksen i hjel.



“நான் இன்று சாகவில்லை. எனது நண்பர்களைத் துரத்திய அன்றே இறந்து விட்டேன்”
எனக் கூறியவாறு  இறந்து போனது மண்ணிற எருது.

I det den brune oksen tok sitt aller siste åndedrag, sa han:

*‹‹Det er ikke i dag jeg døde, men den dagen jeg jagde bort min venn.››*









Illustratør: Svetlana Voronkova

Se flere fortellinger på morsmal.no